முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004 c/w.31/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 19.08.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 19.08.2024 | சாட்சி | வா.சா.3 |
| பெயர் | மூர் த்தி | வயது.. | 49 |
| தந்தை பெயர்.. | தங்கராசு | Official witness | Assisstant, Boovaragasamy temple, Srimushnam. |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி..**

3. சா.சா.ஆ.2 பக்கம் 1 ல் 14.03.2001 தேதியிட்ட ஆவணத்தில் என்ன ஆவணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை ஆனால், ரொக்க பட்டுவாடா நோட்டு புக்கில் இருந்து தான் சா.சா.ஆ.2 ஆவணம் தயாரிக்கப்பட்டது. அந்த புத்தகத்தில் ரொக்க பட்டுவாடா நோட்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த புத்தகம் பூவராக சுவாமி திருக்கோவில் சம்மந்தப்பட்ட புத்தம் என்று அறங்காவலளார் கையெழுத்திடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, அந்த நோட்டில் குறிப்பிடுவது வழக்கம் இல்லை ஆனால் கோவில் பதிவேட்டில் குறிப்பிடும் வழக்கம் உண்டு. சா.சா.ஆ.2, 1 ஆம் பக்கத்தில் பணம் பெற்றதற்கான கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை ஆனால் பெரியசாமி என்பவர் மட்டும் கையெழுத்து போட்டுள்ளார்.

4. சா.சா.ஆ.2, 1 ஆம் பக்கத்தில் ஆவணத்தை யார் பூர்த்தி செய்த விவரம் உள்ளதா என்றால் அதுபோன்ற வழக்கம் இன்று வரை இல்லை. இதை எழுதியவர் யார் என்றோ, பணியில் யார் இருந்தார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.2, 1 ஆம் பக்கத்தில், செயலாளர் வி.டி.கலியபெருமாள் முதலியார் என்று எழுதி நாயுடு என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டுவாடா யாரால் செய்யப்பட்டது என்று சா.சா.ஆ.2, 1 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் நான்கு பெயரால் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாக கண்டுள்ளது.

5. 04.03.2002 தேதியிட்ட ஆவணத்திலும், 14.03.2001 ஆவணத்திலும் கலியபெருமாளின் கையெழுத்து மாறுப்பட்டதாக காணப்படுகிறது என்றால் இல்லை. சா.சா.ஆ.2, 2 ம் பக்கத்தில் 04.03.2002 தேதியிட்ட விவரத்தில் தலைவர் சி.பி.சட்டநாதமுதலியார், இணை செயலாளர் ஏ.கே.ராமசாமி, பொருலாளர் வீர ராம

செட்டியார் போன்ற விவரங்கள் வேறு பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.2, 2 ம் பக்கத்தில் 04.03.2002 தேதியிட்ட ஆவணத்தில் கடைசியாக கமலகண்ணன் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் கமலகண்ணன் எந்த பொருப்பில் இருந்தார் என்று 2 ம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2002 ம் ஆண்டு யார் பணியாளராக இருந்தார் என்றால் வீரராகவன் என்பவர் கணக்கராக பணியில் இருந்தார், உபய தாரர்களின் விவரத்தை அவர் தான் கணக்கில் எழுதுவார்.

6. உபயதாரர் பற்றிய விவரங்கள் வீரராகவன் வைத்துள்ள பதிவேட்டில் தான் இருக்கும் என்றால் உபயதாரர்கள் வைத்துள்ள புத்தகத்தில் தான் வீரராகவன் கையெழுத்து இருக்கும். சா.சா.ஆ.2, 1 ம் பக்கத்தின் படி உபயதாரர்கள் யார் யார் என்று தெரியுமா என்றால் அதில் குறிப்பிட்டுள்ள நான்கு நபர்களால் பட்டுவாடா செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சா.சா.ஆ.2, 2 ம் பக்கத்தில் கமலகண்ணன் பெயர் எதற்காக எழுதப்பட்டது போன்ற விவரங்கள் எதுவும் தெரியாது. கமலகண்ணன் 2002 ஆம் ஆண்டு வர்த்தக சங்க பொருப்பில் இல்லை என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. சா.சா.ஆ.2, 3 ம் பக்கத்தில் 20.02.2003 தேதியிட்ட ஆவணத்தில் யாரால் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தலைவர் சட்டநாத முதலியார் , செயலாளர் கலியபெருமாள், இணை செயலாளர் ராமசாமி, பொருலாளர் வீரராமசெட்டியார் ஆகிறோரால் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

7. 11.03.2004 தேதியிட்ட ஆவணத்தில் வர்த்தக சங்க தலைவர் டி.டி.கலியபெருமாள், கமலகண்ணன், செயலாளர் ACP.ரத்தினசுப்பிரமணியன், பொருலாளர் ராஜேந்திரன் மற்றும் உறுப்பினர்களால் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பணம் பெற்றதற்கான பட்டுவாடா உபயதாரர்களிடம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உபயதாரர்கள் கொடுக்கும் பணத்தை கோவில் நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கான ரசீது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் பணம் கொடுப்பவர்களுக்கு திருவிழா காலத்தில் பணம் பட்டுவாடா நோட்டில் எழுதிக்கொடுப்போம்.

**சாட்சி விசாரணை ஒத்திவைப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Principal District Munsif (FAC)
Chidambaram.